Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPORTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY SELL INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
Realtor
416.888.7877

31ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221

நதி: 31 | பாலம்: 22 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | NOVEMBER 15, 2021

# சூழல் வெப்பநிலை அதிகரிப்பு 1.5°C?

ஐக்கிய நாடுகளின் காலநிலை மாநாடு ஐக்கிய இராச்சியத்தின் ஸ்கொட்லாந்தில் Glasgow நகரில் 2021 ஒக்ரோபர் 31இல் இருந்து நொவெம்பர் 13வரை ஐக்கிய இராச்சியத்தின் அரசாங்க அமைச்சர் Alok Sharma தலைமையில் நடைபெற்றது.

கோவிட்-19 தொற்றுநோய்ப் பரவல் காரணமாக 2020 ஏப்பிரலில் நடைபெற இருந்த இந்த மாநாடு 2021 ஒக்ரோபரிற்கு பின்போடப்பட்டது. ஐக்கிய நாடுகளின் மாநாட்டின் செயற்திட்டங்களை ஊக்கு விக்கத் தேவையான முடிவுகளை எடுக்க அதிகாரம் கொண்ட கட்சிகளின் மாநாடு (Conference of Parties) என்பதைக் குறிக்குமுகமாக இந்த 26ஆவது ஐக்கிய நாடுகளின் காலநிலை மாநாடு COP26 என அழைக்கப்படுகிறது. இந்த COP26 மாநாட்டில் 200 நாடுகளைச் சேர்ந்த 25,000 பிரதிநிதிகள் பங்குபற்றினர். மாநாட்டின் ஆரம்ப நாட்களில் 120 நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இம்மாநாட்டில் கலந்து கொண்ட தலைவர் களில் குறிப்பிடத்தக்கவர்கள் கனடியப் பிரதமர் JustinTrudeau, அமெரிக்க அதிபர் Joe Biden, ஜெர்மன் அதிபர் Angela Markel, பிரெஞ்சு அதிபர் Emmanvel Macron, இந்தியப் பிரதமர் Narendra Modi, மற்றும் மாநாட்டை நடத்தும் ஐக்கிய இராச்சியத்தின் பிரதமர் Boris Johnson. ஐக்கிய இராச்சியத்தின் இளவரசர் Charles இம்மாநாட்டின் ஆரம்ப வைபவத்தில் கலந்து சிறப்பித்தார்.

இம்மாநாட்டில் கலந்துகொள்ளப் புதை படிவ எரிபொருள் தொழில்த்துறை (Fossil Fuel Industry) 503 உறுப்பினர்களைக் கொண்ட மிகப் பெரிய பிரதிநிதிகள் குழுவை அனுப்பி இருந்தது குறிப்பிடத் தக்கது. இலங்கை அதிபர் Gotabaya Rajapaksa உடன் இலங்கை அமைச்சர் குழு ஒன்றும் இம்மாநாட்டில் பங்கு பற்றியது.

இந்த COP26 மாநாட்டின் முக்கிய குறிக்கோள், சுற்றுப்புறச் சூழல் வெப்ப நிலை அதிகரிப்பதைத் தொழிற்துறைக்கு முந்திய (Pre-Industrial) காலத்தில் (1850 ஆண்டுகளில்) இருந்த சுற்றுப்புறச் சூழல் வெப்ப நிலையைவிட 1.5°Cஇற்கு மேல் அதிகரிக்க விடாமல் தடுக்க வேண்டும் என்பதாகும்.



இதற்கு முன்னர் 2015 நொவெம்பரில் பிரான்ஸ் இன் பரிஸ் நகரில் நடைபெற்ற COP21ஆவது மாநாட்டின் முக்கிய குறிக் கோளாகச் சுற்றுப்புறச் சூழல் வெப்பநிலை உலகின் தொழிற்துறைக்கு முந்திய காலச் சுற்றுப்புறச் சூழல் வெப்பநிலையை விட அதிகரிப்பதை 2.0°Cஇற்கு மிகக் குறைவாகக் கட்டுப்படுத்தி வைத்திருக்க வேண்டும் என்பதாகும்.

2015ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட தரவு களின்படி சுற்றுப்புறச் சூழலின் வெப்ப நிலை உலகின் தொழிற்துறைக்கு முந்திய சுற்றுப்புறச்சூழல் வெப்பநிலையை விட 0.87°Cஆல் அதிகரித்திருந்தது. அத்துடன் தற்போது சுற்றுப்புறச் சூழலின் வெப்ப நிலை ஒவ்வொரு தசாப்தத்திற்கும் 0.2°Cஆல் அதிகரித்துக் கொண்டு செல்கிறது. உலக நாடுகள் சுற்றுப்புறச் சூழல் வெப்பநிலை அதிகரிப்பதைத் தடுக்க தீவிர நடவடிக்கை எடுக்காவிட்டால் சுற்றுப்புறச் சூழல் வெப்பநிலை அதிகரிப்பு 2050ஆம் ஆண்டிற்கு முன்னரே 1.5°C அதிகரிப்பை அடைந்துவிடும் என சுற்றுப் புறச் சூழலியலாளர் எச்சரிக்கின்றனர்.

2015ஆம் ஆண்டில் 40 நாடுகளைச் சேர்ந்த 91 சுற்றுப்புறச் சூழலியலாளர் 6,000இற்கு மேற்பட்ட விஞ்ஞானத் தரவு களை மேற்கோள் காட்டி ஐக்கிய நாடுகளின் சார்பில் வெளியிடப்பட்ட விசேட அறிக்கையின்படி சுற்றுப்புறச் சூழல் வெப்பநிலை 1.5°C அதிகரிக்கும்போது மக்களின் உடல்நலம், வாழ்வாதாரம், உணவுப் பாதுகாப்பு, நீர்வளங்கள், மனிதப் பாதுகாப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பன தீவிரமாகப் பாதிக்கப்படும். பயிர் விளைச்சல் குறையும், அவற்றின் ஊட்டச் சத்துகளின் தரம் மிகவும் குறையும். மலேரியா மற்றும் டெங்குக் காய்ச்சல் போன்ற நோய்கள் தீவிரமாகப் பரவும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான அறிக்கைகளும் சுற்றுப்புறச் சூழலியலாளர்களின் தீவிர பிரசாரமும் COP26 மாநாட்டின் குறிக்கோளாகச் சூழல் வெப்பநிலை அதிகரிப்பை 1.5°Cஇற்கு மேல் அதிகரிக்க விடாமல் தடுக்க வேண்டும் என வைப்பதற்கு ஒரு காரணமாக இருந்தது.

COP26 மாநாட்டில் எடுக்கப்படும் தீர்மானங்கள் சுற்றுப்புறச் சூழல் வெப்ப நிலை அதிகரிப்பைத் தடுக்கப் போதாது என 100,000இற்கு மேற்பட்டோர் Glasgow நகரில் திரண்டு பேரணி ஒன்றை நடத்தினர். இதேநேரம் இவ்வாறான பேரணிகள் கனடா உட்பட 100இற்கு மேற்பட்ட நாடுகளில் ஒரே நேரத்தில் நடைபெற்றது.

சுவீடன் நாட்டைச் சேர்ந்த Greta Thunberg ஊடகவியலாளர்களுக்குக் கூறுகையில் COP26 மாநாடு மிகப்பெரிய தோல்வி என்றார். அவரும் Glasgow நகரில் நடைபெற்ற பேரணியில் பங்குபற்றியிருந்தார்.

மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் குறிப்பிடத்தக்கவை:

- கனடா உட்பட 25 நாடுகள் (ஐக்கிய அமெரிக்கா, டென்மார்க், இத்தாலி, நியூசிலாந்து உட்பட) புதைபடிவ எரிபொருள் திட்டங்களுக்கான அனைத்துப்

தொடர்ச்சி 02ஆம் பக்கம்...)

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083
kannanhomes143@yahoo.com
HomeLife/Future Realty Inc.

Lexus of Richmond Hill
LEXUS
குமார் ஜெகசோதி
Tel. 905.883.8812
Cell: 416.451.0565
Kumar Jegasothy
Sales Consultant
11552 Yonge Street
Richmond Hill, ON L4E 3N7
www.lexusrh.com

My services are 100% FREE
வீடு வாடகைக்கு வாங்க மற்றும் விற்க அழையுங்கள்
Para Tiai
"Don't wait to buy real estate. Buy real estate and wait."
Call Para

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Sukumar Selvaratnam
Real Estate Broker
416.624.4803
suku07@hotmail.com
www.sukumarhomes.com

Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Sukumar Selvaratnam
Real Estate Broker
416.624.4803
suku07@hotmail.com
www.sukumarhomes.com

DENTAL OFFICE
3351 Markham Road, Unit #129
Markham& Steeles
Tel: 416.609.2022
3150 Eglinton Ave East, Unit #5
Markham & Eglinton
Tel: 416.264.3232
Dr.Iru Vijayanathan
BDS, FAGD, MFDS RCPS(Glasg.)
Dental Surgeon
Dentistry for children, adults and seniors

வீடு வாடகைக்கு... வாங்க/ விற்க...
Rathiga Thillaivannan
Broker
Dir: 647.839.0079
Re/Max Realtron Realty Inc

GTA Square, 5215 Finch Ave. E., #201, Toronto, ON M1S 0C2, Canada. Tel: 416.282.8059 | Fax: 416.286.0334, Email: vlambaram@sympatico.ca, info@vlambaram.com. Web: www.vlambaram.com





# சூழல்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி



பொதுநிதி உதவிகளையும் 2022ஆம் ஆண்டுடன் முடிவுக்குக் கொண்டுவர உறுதி அளித்துள்ளன.

• உலகில் நிலக்கரி எரிப்பதன் மூலம் மின்சாரம் அதிக அளவில் உற்பத்தி செய்யும் 5 நாடுகள் உட்பட 40 நாடுகள் தாங்கள் நிலக்கரி எரிப்பதன் மூலம் மின்சாரம் தயாரிப்பதைப் படிப்படியாக நிறுத்துவதற்கு உடன்பட்டுள்ளன.

• உலகின் முக்கிய வங்கிகள் நிலக்கரி மூலம் மின்சாரம் தயாரிப்பதற்கு நிதியுதவி வழங்குவதை இந்த ஆண்டுடன் முடிவுக்குக் கொண்டுவர உறுதி யளித்துள்ளன.

• கனடா உட்பட 100 நாடுகள் (அமெரிக்கா, ரஷ்யா, பிரேசில், இந்தோனேசியா உட்பட) காடழிப்பை (deforestation) 2030ஆம் ஆண்டுக்குள் முடிவுக்குக் கொண்டுவர உறுதி அளித்துள்ளன.

• அமெரிக்கா, கனடா உட்பட 80 நாடுகள் மீத்தேன் (methane) வாயு வெளியேற்றத்தை 2030ஆம் ஆண்டிற்குள் 30%ஆல் குறைப்பதற்கு உறுதி யளித்துள்ளனர்.

• மாநாட்டில் கலந்து கொண்ட பல நாடுகள் நிகர-பூச்சிய காபன் உமிழ்வை அடைவதற்கு உறுதி பூண்டன. உலகில் அதிக அளவில் காபன் உமிழ்வை செய்யும் முதலாவது நாடான சீனா 2060ஆம் ஆண்டிற்குள் நிகர-பூச்சிய காபன் உமிழ்வை அடைவதற்கு உறுதி செய்தது. அதேபோல் உலகில் மூன்றாவது அதிக அளவு காபன் உமிழ்வைச் செய்யும் நாடான இந்தியா 2070ஆம் ஆண்டிற்குள் நிகர-பூச்சிய காபன் உமிழ்வை அடைவதற்கு உறுதி செய்தது. உலகின் இரண்டாவது அதிக அளவு காபன் உமிழ்வைச் செய்யும் நாடான அமெரிக்காவின் தற்போதைய அரசு நிகர-பூச்சிய காபன் உமிழ்வை 2050ஆம் ஆண்டுக்குள் அடைய உறுதி அளித்துள்ளது. கனடா ஏற்கனவே 2050ஆம் ஆண்டுக்குள் நிகர-பூச்சிய காபன் உமிழ்வை அடைவதற்கு உறுதி பூண்டுள்ளது.

கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ COP26 மாநாட்டில் உரையாற்றும்போது "உலகின் பசுமை வாயுக்கள் வெளியேற்றத்தின் 20%இற்கு காபன் வரி தற்போது அறவிடப்படுகிறது. இம்மாநாட்டில் கலந்து கொள்ளும் உலகத் தலைவர்கள் 2030ஆம் ஆண்டிற்குள் இப்பசுமை வாயுக்கள் வெளியேற்றத்தின் 60%இற்கு காபன் வரி அறவிட வேண்டும்" எனக் கேட்டுக்கொண்டார்.




அவர் மேலும் தெரிவிக்கையில் "ஒரு சரியான முறையில் திட்டமிடப்பட்டு வடிவமைக்கப்பட்ட காபன் வரித் திட்டம் தனியார் துறைக்குச் சமிக்ஞையைக் கொடுக்கிறது. பொருளாதாரத்தை மாற்றம் செய்கிறது. பொதுமக்களை சிறந்த தேர்வுகளைச் செய்ய ஊக்குவிக்கிறது" என்று கூறினார்.

கனடிய மத்திய அரசு தற்போது ஒரு tonne காபன் வெளியேற்றத்திற்கு $40 அறவிடுகிறது. இது 2030ஆம் ஆண்டில் ஒரு tonne காபன் வெளியேற்றத்திற்கு $170ஆக அதிகரிக்கப்படவுள்ளது. அப்போது பெற்றோல் (gasoline)இன் விலை ஒரு லீட்டருக்கு 8.8 சதத்தால் (தற்போதைய விலையில்) அதிகரிக்கும்.

கனடாவின் மின்சார உற்பத்தி நிகர-பூச்சிய உமிழ்வு நிலையை 2035ஆம் ஆண்டில் அடையும் எனக் கனடியப் பிரதமர் தேர்தல் காலத்தில் உறுதியளித்திருந்தார். அத்துடன் நிலக்கரியில் இருந்து மின்சாரம் தயாரிப்பதை நிறுத்திவிட்டு தூய மின்சார உற்பத்திக்கு மாறுவதற்கு வளர்முக நாடுகளுக்கு ஊக்கமளிக்கக் கனடா $1 பில்லியன் நிதி உதவி செய்ய முன்வந்துள்ளது.

கனடியப் பிரதமர் COP26இல் அளித்த உறுதிமொழிகளைத் தொடர்ந்து கனடாவில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் 69%ஆனோர் பிரதமரின் நிலையை ஆதரிக்கின்றனர் என CP24 செய்தி ஊடகம் தெரிவித்துள்ளது.

COP26 மாநாட்டில் பங்குபற்றுமாறு வந்த அழைப்பை நிராகரித்த கனடாவின் சுற்றுப்புற சூழலியலாளரான David Suzuki இந்த மாநாட்டை "ஒரு கேலிக்கூத்து என வர்ணித்துள்ளார்." "ஐக்கிய நாடுகளின் காலநிலை மாநாட்டிற்கு புதைபடிவ எரிபொருட்களின் உற்பத்தியைத் தடை செய்ய வேண்டும் என்று தமது நிகழ்ச்சி நிரலில் கொண்டுவருவதற்கு 26 மாநாடுகள் எடுத்தன" என்றார். "இந்த நிகழ்வை அவர்கள் கொண்டாடுகின்றனர், இது முன்னேற்றமா?" என David Suzuki ஊடகவியலாளரை நோக்கிக் கேட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "எங்களுக்கு அவசர நிலை உள்ளது என்ற அடிப்படை உண்மையின் மீது யாரும் கவனம் செலுத்தவில்லை. மனிதர் பூமியின் வளிமண்டலத்தின் இரசாயன நிலையை மாற்றியுள்ளனர். காலநிலை மாற்றம் பற்றிய ஆய்வுகள் செய்யும்

தொடர்ச்சி 09ஆம் பக்கம்...)



Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL

MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் ஒரு தளத்தில் இணைவது சாத்தியமா?




தமிழ், முஸ்லிம் கட்சிகளின் பிரதிநிதிகள் கடந்த 2ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளனர்.

13ஆம் திருத்தச் சட்டத்தை முற்று முழுதாக, நடைமுறைப்படுத்துவதற்கு இந்திய அரசாங்கத்தை ஒருமித்த நிலைப் பாட்டில் கோருவதற்காகவே இக்கலந்துரை யாடல் ஏற்பாடு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர் செல்வம் அடைக்கலநாதன் இக்கலந்துரையாடலை ஏற்பாடு செய்திருந்தார். கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் மற்றொரு கட்சியான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (புளொட்) தலைவர் தர்ம லிங்கம் சித்தார்த்தன், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், தமிழ் தேசியக் கட்சியின் தலைவர் சிறீகாந்தா ஆகியோரும் பங்குபற்றியுள்ளனர்.

தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் சார்பில் பேராசிரியர் சிவநாதன் கலந்து கொண்டார். ஆனால் இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் எவரும் கலந்து கொள்ளவில்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் இதில் கலந்துகொள்ளவில்லை.

இதனால் இக்கலந்துரையாடல் முழுமை யானதாக அமையவில்லை என்கின்ற உணர்வு மனோ கணேசன், ரவூப் ஹக்கீம் போன்றோருக்கு ஏற்பட்டது.

“தமிழ் பேசும் கட்சிகளின் உரையாடல், தமிழ் கட்சிகள் மத்தியில் ஐக்கியத்தை மென்மேலும் வலுப்படுத்த வேண்டும், அதை விடுத்து இதன் மூலம் பிளவுகள் அதிகரிக்குமானால், இத்தகைய முயற்சி களில் பங்குபற்றி கால விரயம் செய்ய தமிழ் முற்போக்குக் கூட்டணியாக நாம் விரும்ப மாட்டோம்” என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுத் தெரிவித்தார்.

தமிழ், முஸ்லிம் தரப்புகள் தேர்தல் உட்பட அனைத்து நடவடிக்கையிலும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான அவசியம் மிக வேகமாக உணரப்பட்டு வருவதாக ரவூப் ஹக்கீம் கருத்து வெளியிட்டிருந்தார்.

அடையாள ரீதியாக முதல் சந்திப்பு நடைபெற்றதாகவும், எதிர்வரும் காலங் களில் தாங்கள் அனைத்து தரப்பு களையும் சந்தித்து இந்த ஒன்றிணைவு முயற்சி முன்கொண்டு செல்லப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதனையடுத்து, தமிழ் தேசிய கூட்ட மைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை அவர்கள் இருவரும் சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது, யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழ், முஸ்லிம் கட்சிகளின் உரையாடல் தொடர்பாக ரவூப் ஹக்கீமும், மனோ கணேசனும் சம்பந்தனிடம் எடுத்துக் கூறினர். இவ்வாறான சந்திப்பில் தமிழரசு கட்சியும், மூத்த தலைவரான சம்பந்தனும் கலந்து கொள்வதை தாங்கள் விரும்புவதாக இருவரும் தெரிவித்தனர்.

நாட்டில் சிறுபான்மையினராகவுள்ள, தமிழ், முஸ்லிம் கட்சிகளின் மத்தியில் பொதுவான ஒரு தளம் ஏற்படுவதன் அவசியத்தை சம்பந்தன் ஏற்றுக் கொண்டார் எனினும், தாங்கள் கடந்த காலங்களில் மேற்கொண்ட முயற்சிகள், நடவடிக்கைகளையும் அவர் சுட்டிக் காட்டினார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன காலத்தில் இடம்பெற்ற பெங்களூர் பேச்சுக்கள், திம்பு பேச்சுக்கள், இந்திரா காந்தியுடன் தமிழ் கட்சிகளின் பேச்சுவார்த்தை, ராஜீவ் காந்தியுடனான பேச்சுவார்த்தை போன்ற வற்றைக் குறிப்பிட்டு, இவற்றின் பின்தான்



13ஆம் திருத்தம் இலங்கை அரசியலமைப்பில் நுழைந்தது என்றும் சுட்டிக்காட்டினார்.

மஹிந்த ராஜபக்ஸவின் ஆட்சியில் ஒரு முறை 13ஆம் திருத்தம் உள்ளிட்ட மாகாணசபை அமைப்பையே அரசியல் அமைப்பிலிருந்து தன்னிச்சையாக அகற்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதன் போது, தான் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இந்தியப் பிரதமரிடம் முறை யிட்டதாகவும். சில மணித்தியாலங்களில் இந்தியப் பிரதமரின் விசேட தூதர் விசேட விமானத்தில் கொழும்பு வந்து, அந்த முயற்சியை தடுத்து நிறுத்தியதாகவும் கூறினார்.

தாங்கள் இந்த விடயம் தொடர்பில் ஏற்கனவே கவனமாக இருந்ததையும், தொடர்ந்தும் விழிப்பாகவே இருப்போம் என்பதையும் வெளிப்படுத்தவே இவ் விடயங்களை மனோ கணேசன், ரவூப் ஹக்கீம் ஆகியோரிடம் சம்பந்தன் கூறியிருக்கின்றார்.

மேலும், “தீர்வை நோக்கிய பயணத்தில் தமிழ் பேசும் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் மத்தியில் ஒற்றுமை வேண்டும். அந்த ஒற்றுமை முயற்சியை அகில இலங்கை தமிழரசுக் கட்சி ஒருபோதும் குழப்பாது. நாங்களும் கலந்து பேசத்தான் வேண்டும். கலந்து பங்களித்து ஒற்றுமையை மேலும் பலப் படுத்தத்தான் வேண்டும்” என சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழ் பேசும் கட்சிகளின் பேச்சுவார்த்தை தளத்தில் எப்படி இணைந்து கொள்வது என்பது தொடர்பில் தமது கட்சி நாடாளு மன்ற உறுப்பினர்களுடன் கலந்து பேசி அறிவிப்பதாகவும் சம்பந்தன் கூறினார்.

இலங்கையில், வரலாற்று ரீதியாக சிறுபான்மை மக்கள் ஒடுக்கப்பட்டு வந்துள்ளனர். சிறுபான்மை மக்கள் என்று கூறும் போது தமிழ் மக்களே மோசமாக ஒடுக்கப்பட்டு வந்தனர் என்பது வெளிப் படையானது. முஸ்லிம் தரப்பினர் எந்தக் கட்சி ஆளும் தரப்பாக வருகின்றதோ அதனோடு இணைந்து வரப்பிரசாதங்களை பெற்றுக்கொண்டனர் என்பதும் வெளிப் படையானதே. முஸ்லிம் தலைவர்கள் தங்களுக்கான அரசியல் உரிமைகளுக்கு குரல் கொடுக்காமல் அரசாங்கத்தின் சலுகைகளைப் பெற்றுக்கொள்வதிலேயே முனைப்பாக செயற்பட்டனர். தமிழர் சுயாட்சி அதிகாரத்திற்காக குரல் கொடுக்கும்போது மட்டும் தங்களுக்குத் தனி அலகு வேண்டும் என்று முஸ்லிம் தலைவர்கள் குரல் எழுப்புவர்.

சுயாட்சி அதிகாரம் கோரிப் போராடும் தமிழரை ஒடுக்கி தோல்வியுறச் செய்யும் நடவடிக்கை ஒருபுறம் மேற்கொள்ளப்பட்டு வந்த அதேவேளையில், நாட்டில் முஸ்லிம் களின் பொருளாதாரத்தை இல்லாமல் செய்யும் திட்டமும் நடைமுறைப்படுத்தப் பட்டு வந்தது. இதன் ஆபத்தை முஸ்லிம் தலைவர்கள் பெரிதாக கண்டு கொள்ளவில்லை.

இன்று சிங்களத் தரப்பில் உள்ள இனவாதிகள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படும் சூழல் ஏற்பட்டுள்ளது. இதில் முஸ்லிம் தரப்பினர் அதிகம் பிரச்சினைகளுக்கு உள்ளாகியுள்ளனர். இந்த நிலையில் தமிழ் பேசும் மக்கள் என்ற அடிப்படையில் தமிழ், முஸ்லிம் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும். நாட்டில் சிறுபான்மை மக்கள் ஒடுக்கப்படுவதற்கு எதிராக ஒருமித்து குரலெழுப்ப வேண்டும்.

தமிழ் தேசியம் சார்ந்து செயற்படும் தமிழ் கட்சிகளே பிரிந்து செயற்படுகின்றன. சர்வதேச விவகாரங்களில் கூட ஒன்றிணைந்து, ஒரே குரலில் பேச முடியாத நிலையில்தான் தமிழ் தேசியக் கட்சிகள் உள்ளன. இந்த நிலையில் தமிழ் பேசும் கட்சிகள் செயற்படும் நிலை சாத்தியமா? என்கின்ற கேள்விகள் எழுவதை தவிர்க்க முடியாததுதான். ஆனால், வடக்கு கிழக்கு தமிழர், மலையகத் தமிழர், தமிழ் பேசும் முஸ்லிம்கள் இணைந்து செயற்படும் தளம் ஒன்று அமைவது காலத்தின் கட்டாயமாகும்.


விளம்பரம்
VLAMBARAM
31ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.

‘விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்’ நிறுவனத்தால் வெளியிடப்படும் ‘விளம்பரம்’ பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com

Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved


என் தவறை என்னிடம்
தயங்காமல் கூறுபவன்
நண்பன்...
என் தவறை மற்றவர்களிடம்
தயங்காமல் கூறுபவன்
துரோகி..!!

# MORTGAGE & LINE OF CREDIT

MORTGAGE IN ANY SITUATION

- ⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் ( OAC*)
- ⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC - No Income Required*)
- ⇒ **Private Mortgage** (No Income Verification)
- ⇒ ரீபைனான்ஸ்,Title Transfer, ரினிவல்
- ⇒ 2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)
- ⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கான மோர்ட்கேஜ்
- ⇒ எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க
- ⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல்**
**வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

MORTGAGE CLINIC



www.mortgageclinicanada.com

416-613-2788 / 416-816-9011

## ஜெ(Jey)இராசதுரை

MBA. BBA (Hon) AMP

Team Leader / Mortgage & Real Estate Broker

**Cell : 416-624- 4843**



RIGHT AT HOME REALTY INC.

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER=RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage: 1396 Don Mills Rd, Unit B121Toronto ON M3B 0A7 Corp office : 200-2005 Sheppard Ave E, Toronto ON M2J 5B4

# NOTARY PUBLIC & LEGAL SERVICES

**Notarizations, Certifications & Commissioning**

- ☆ Affidavits
- ☆ Certification of true copy
- ☆ Preparation and notary of Letter of Invitation
- ☆ Commissioning statutory declarations and solemn affirmations

- ☆ Small Claims
- ☆ Landlord & Tenant Matters

AAA Legal Services
AAA LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION

**Call:(416) 814 -7450**

(Markham Rd & HWY 401 - Scarborough)

** Promotional Rate for students $20per sign

# நாமும் நமது இல்லமும் 595

## 2022 இல் ஆதன வியாபாரத்தில் மாற்றம்



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

2022இல் ரொறொன்ரோ நகரில் ஆதன வியாபாரம் சம்மந்தப்பட்ட புதிய நெறி முறைகள் நடைமுறைக்கு வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

முதலாவதாக, வாடகைக்கு கொடுக்கப்படா மல் வெறுமையாக வைத்திருக்கும் ஆதனங்களிற்கு மேலதிக வரி (Vacancy Home Tax) செலுத்தவேண்டி வரலாம். இது எவ்வளவு தூரம் சாத்தியப்படும் என்பது காலம்தான் பதில் கூறும். வன்கூவரில் அண்மையில் கொண்டு வந்தபின்னரும் முன்னரைவிட ஆதன விலையில் அதிகரிப்பு ஏற்பட்டதைக் காணலாம்.

ஆதன விலையை கட்டுப்படுத்த வேண்டிய வேறுபல திட்டங்களை அரசு கொண்டுவர வேண்டுமென ஏற்கனவே ஆய்வாளர்கள் தெரிவித்த போதிலும், அதற்கேற்ப திட்டங்கள் அரசிடம் இல்லை என்றே கூறலாம். அல்லது அரசியல் இலாபம் கொடுக்காது என்பதால் இவ்வாறான சட்டங்கள் பின் போடப்பட்டு வருவதாகக் கொள்ளலாமா?

வருடாவருடம் கனடாவிற்கு வரும் 400,000 குடிவரவாளர்களில் 30% ஆனோவர் ரொறொன்ரோ பெரும் பாகத்திற்கு வருகின்றனர். இதனால் எதிர்வரும் 10 வருடங்களில் குறைந்தது ஒரு மில்லியன் ஆதனங்களை ஒன்ராறியோவில் நிர்மாணம் செய்ய வேண்டிய நிலைமை உள்ளது. சராசரியாக ஒவ்வொரு ஆண்டும் 80 ஆயிரம் ஆதனங்கள் கட்டி முடிக்கப்பட வேண்டும். மற்றும் இலகுவாகக் குறைந்த வட்டி வீதத்தில் பணம் மக்களுக்கு செல்வதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட வேண்டும்.

பணவீக்க அதிகரிப்பால் 2022இல் வட்டி வீதம் நிச்சயம் அதிகரிக்கப்படலாம். இந்த வட்டிவீத அதிகரிப்பைப் பொறுத்தே ஆதன வியாபாரத்தின் பாதிப்புத் தெரிய வரும்.

அத்துடன் வெளிநாட்டவர்கள் ஆதனம் வாங்குவதைக் குறிப்பிட்ட காலத்திற்குக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரலாம். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆதனம் வாங்குவோருக்கு ஆரம்ப முதலீடு மேலதிகமாக அதிகரிக்கப்பட லாம். இம்முறை வேறு சில நாடுகளில் நடைமுறையில் உள்ளது.

முதற் தடவை வாங்குவோருக்கு சலுகை கள் வழங்குதல், நீண்ட காலத்தில் வாங்கிய பணத்தை திருப்பிக் கொடுக்கும் முறை (amortization) நடைமுறைப்படுத் தல், முதற்தர நிதி நிறுவனங்கள் தவிர்த்து இரண்டாம்தர நிறுவனங்களுக்கும் முதற் தடவையாக ஆதனம் கொள்வனவு செய்வோராருக்குச் சலுகைகளை கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தங்கள் அரசினால் ஏற்படுத்தப்படலாம்.

மறைமுகமாக ஆதனம் விற்கும் முறையில் திருத்தம் செய்யப்படலாம். அதாவது ஓர் ஆதனத்தை வாங்குவதற்குப் பலர் போட்டி யிடும்போது, போட்டியிடும் ஒவ்வொரு வரும் வாங்குவதற்காகக் குறிப்பிட்ட விலைகளை வெளிப்படையாகத் தெரியப் படுத்துதல். அவுஸ்திரேலியாவில் இம் முறை நடைமுறையில் உள்ளது. இதனால் தேவைக் கதிகமான விலை கொடுப்பது தவிர்க்கப்படலாம்.

பொதுவாக ஓர் ஆதனம் விற்கப்படும் போது வாங்குபவர் (buyer) உள் நாட்டவர் அல்லது வெளிநாட்டவர் மற்றும் வாங்குபவர் வாழ்வதற்காகவா அல்லது வாடகைக்கு விடுவதற்காகவா என்பதைக் கொண்டு விற்பவர் (seller) முடிவுகள் எடுக்கப்பட வேண்டிய நிலைமைகள் ஏற்படுத்தப்படலாம். வெளிநாட்டவரும் கனடியர்களும் ஆதனம் வாங்கப் போட்டியிடும்போது கனடியர்களுக்குச் சாதகமாக இருக்கலாம்.

வாடகைக்கு இருப்போருக்கு அரசினால் வரிச் சலுகைகள் கொடுக்கப்படலாம். உதாரணமாக கனடாவில் 68%ஆனோர் ஆதன உரிமையாளர்களாக இருக்கின்ற னர். ஆனால் சுவிட்சர்லாந்து, ஜெர்மனி போன்ற நாடுகளில் 30% தொடக்கம் 40% ஆனோரே ஆதன உரிமையாளர்களாக



இருக்கின்றனர். ஆதன உரிமையாளர் களைவிட வாடகைக்கு இருப்போரிற்கு அதிக சலுகைகள் அரசினால் வழங்கப் படுவதால் அங்குள்ள மக்கள் வாடகைக்கு இருப்பதையே விரும்புகின்றனர் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

வன்கூவரில் கொண்டு வரப்படும் புதிய முறையில் ஆதனம் வாங்குவோரிற்கு 5 தொடக்கம் 10 நாட்கள்வரை இறுதி முடிவு எடுக்கும் காலம் (cooling period) கொடுக்கப்பட வேண்டும். இம்முறையால் வாங்குவோர் பாதுகாக்கப்படுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. இதே முறைதான் ஒன்ராறியோவில் புதிதாக நிர்மாணம் செய்யப்படும் அடுக்குமாடி மனைகளுக்கு (condominium units) உண்டு. வன்கூவரில் நடைமுறையில் இருக்கும் இத்திட்டத்தின் வெற்றி அல்லது இதன் தாக்கத்தைப் பொறுத்தே இம்முறை (introduction of cooling period) ரொறொன்ரோவிலும் நடைமுறைப்படுத் தப்படலாமா எனத் தெரியவரும்.

எது எவ்வாறாயினும், புதிய வருடத்தில் ஆதன வியாபாரத்தில் ஏற்படும் அதிக விலை அதிகரிப்பிற்குத் தடுப்புப் போட புதிய முறைகள் பல வெளிப்படும் என்பது இயல்பாகவே சிந்திக்கக் கூடியது. மேலே கூறப்பட்டவை என்னுடைய எண்ணத்தில் ஏற்பட்டவையே.

அதிகமான ஆதனங்களை நிர்மாணம் செய்யாத வரையில் ஆதனத் தட்டுப்பாடு தொடர்ந்து இருந்துவரும். இதற்கு மாற்றீடாக ஏற்கனவே இருக்கும் இடங்களில் அதிக மக்கள் வாழக்கூடிய சிறப்பு முறைகள் ஏற்படுத்தப்படலாம். உதாரணமாக ஒரு வீட்டில் நான்கு அறைகள் இருந்தால் ஒன்று அல்லது இரண்டு அறைகளில் உரிமையாளர்கள் வாழ்ந்து கொண்டு மற்றய அறைகளை வாடகைக்கு விடக்கூடிய (rooming house) முறைகள் ஏற்படுத்தலாம். ஏற்கனவே இருக்கும் வீட்டை மேலும் விஸ்தரிப்புச் செய்யக்கூடிய முறையை இலகுவாக்கலாம். இம்முறை இங்கிலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் ஏற்கனவே நடைமுறையில் உள்ளது.

### OCTOBER 2021 HOUSING MARKET BY REGION

| | TORONTO | YORK | DURHAM | PEEL | HALTON |
|---|---|---|---|---|---|
| Average Sales Price: | $1,122,463 | $1,376,939 | $988,343 | $1,065,595 | $1,305,714 |
| Total # New Listings | 5,140 | 2,070 | 1,135 | 2,090 | 943 |
| Total # Sales | 3,794 | 1,834 | 1,046 | 1,920 | 850 |
| Avg. Listing Days On Market (LDOM) | 16 | 13 | 9 | 11 | 10 |
| YTD Increase | 6% | 20% | 31% | 19% | 22% |
| **HOUSE TYPES AND AVERAGE SALES PRICE** | | | | | |
| Detached | $1,784,979 | $1,744,152 | $1,104,587 | $1,433,956 | $1,653,245 |
| Semi-Detached | $1,322,229 | $1,175,640 | $817,965 | $1,020,941 | $1,099,098 |
| Townhouse | $1,343,920 | $1,179,361 | $885,427 | $947,287 | $1,072,935 |
| Condo Apt | $739,647 | $677,317 | $569,535 | $591,159 | $699,979 |

**Prepared By: Sivage Sivagumaran REALTOR® CPA, CGA, GUILD™, ABR, SRES, SRS, RSPS  Source: TRREB Data As of, Nov/06/2021**

## கதவைத் திறவாய் கண்ணம்மா...!

கதவைத் திறவாய் எந்தன்
கண்ணான கண்ணே கண்ணம்மா
இதயத்தைத் திருடி இனிக்கப் பேசி
இல்லாளாய் வாழ வந்தவள்நீ
உதயம் காணில் வானம் சிவக்கும்
உனதுருவம் காணில் கண்கள் வியக்கும்
நிதமும் நெஞ்சில் நிறைந்தாய் என்
நினைவுகளோடு கலந்தாய்
வதமும் செய்தாய் இருவிழிகளினால்
வரமாய் வாழ்வினில் இணைந்தவளே
கதவைத்திறந்து என்னைக்
கனிவுடன் பாராய் கண்ணம்மா
காலைக் கதிரவனை கண்களால்
காணத்தான் முடிவதில்லை கனடாவில்
ஓலைக் குடிசையில்
ஓட்டுத் துண்டுடன் வாழ்ந்தாலும்
காலைக் கதிரவனுடன் நாள்தோறும்
கதைபேச மறந்ததில்லை நம்மூரில்
சேலை கட்டிச் செந்தமிழ் பேசும்
சேல்விழியாளே என் கண்ணம்மா
காலைக் கதிரவனைத் தினந்தோறும்
காண்பதெல்லாம் உன்முகத்தில்தானே?
வேலைக்குச் செல்வதற்காய் விடி
காலையில் எழுந்து சென்றவன் நான்



மாலையும் மயங்கிவிட்டதே
ஆலையில் அகப்பட்ட கரும்பாக
ஆடிக்காற்றில் அகப்பட்ட துரும்பாக
வேலைமுடித்து வந்து கதவுக்கு
வெளியே நிற்கின்றேன்
கடுமையான குளிர்காற்று
கருணையின்றி வீசுகிறது
காதுமடல்களிரண்டும் குளிரைத்தாங்காது
போதும் போதும் இக்கொடுமையென
புலம்பும் ஓலம் உந்தன்
காதுகளில் விழவில்லையா?
கதவைத் திறவாய்
கண்ணான கண்ணே கண்ணம்மா!



கவிஞர் புரட்சிபாலன்
வன்கூவர்

# பொதுமக்களுக்கு எதனையும் வழங்காத வரவு செலவுத் திட்டம்

- விகிர்தன் -

எதிர்வரும் 2022ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஸ கடந்த 12ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இந்த வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான நாடாளுமன்ற விவாதம் 13ஆம் திகதி ஆரம்பமானது. இந்த விவாதம் இம்மாதம் 22ஆம் திகதி வரை நடைபெறும் என நாடாளுமன்றத் தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இரண்டாம் வாசிப்பு விவாதத்தின் மீதான வாக்கெடுப்பு எதிர்வரும் 22ஆம் திகதி மாலை 05:00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வரவு செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதம் இம்மாதம் 23ஆம் திகதி ஆரம்பமாகி டிசம்பர் 10ஆம் திகதி வரை 16 நாட்கள் நடைபெறும்.

வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு விவாதம் மீதான வாக்கெடுப்பு டிசம்பர் 10ஆம் திகதி மாலை 5:00 மணிக்கு நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த வரவு செலவுத் திட்டம் குறித்து ஒவ்வொரு தரப்பினரும் தங்கள் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் நாடு எதிர்நோக்கும் பொருளாதாரம் தொடர்பான பிரச்சினைகளுக்கு விடைகளை வழங்கியுள்ளதாக ஆளும் தரப்பு உறுப்பினர்கள் புகழாரம் சூட்டியுள்ளனர்.

கொரோனா நெருக்கடியால் பாதிக்கப்பட்ட துறைகளுக்கு நிவாரணம் வழங்குவதில் இந்த வரவு செலவுத் திட்டம் கவனம் செலுத்தியுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். தேவை ஏற்படின் வரவு செலவுத் திட்டத்தில் திருத்தங்களைச் செய்யலாம் என்றும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறியுள்ளார்.

பொதுமக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் வரி விதிப்பதற்கு இந்த வரவு செலவு திட்டம் கவனம் செலுத்தியுள்ளது என அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

அதேநேரம் வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் அமுல்படுத்தப்பட்டால் கடன் சுமையிலிருந்து நாட்டைக் காப்பாற்றி பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்தலாம் என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

மேலும், வெற்றிகரமான வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டு நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஸவிற்கு இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர பாராட்டுகளை தெரிவித்துள்ளார்.




ஆனால், எதிர்க்கட்சிகள் இந்த வரவு செலவுத் திட்டத்தை கடுமையாக விமர்சித்துள்ளன. வரவு செலவுத் திட்டம் இலங்கையை சோமாலியாவாக மாற்றும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

மக்களின் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்தவும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் இந்த வரவு செலவுத் திட்டத்தில் எதுவும் இல்லை எனவும், பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான தெளிவான வேலைத்திட்டம் மற்றும் குறுகிய அல்லது நீண்ட கால செயற்திட்டங்கள் அறிவிக்கப்படவில்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

தற்போதைய குழப்பத்தில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்குப் பதிலாக பேரழிவுப் பாதைக்கு கொண்டு செல்லும் வகையில் வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் வகுக்கப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டார்.

இந்த வரவு செலவுத் திட்டத்தினூடாக கடன் சுமைக்கு தீர்வு வழங்கப்படவில்லை எனவும் அதேவேளை வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் கையிருப்புகளை அதிகரிப்பதற்கான திட்டங்களும் இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

விவசாயிகள் எதிர்கொள்ளும் நெருக்கடி குறித்து வரவு செலவுத்திட்டத்தில் தெளிவான அறிவிப்புக்கள் இல்லை என்பதனால் இது உணவுப் பற்றாக்குறைக்கு வழிவகுக்கும் என்றும் சஜித் பிரேமதாச குறிப்பிட்டார்.

இதேவேளை, சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை நியாயப்படுத்த மாத்திரமே பயன்படுத்த முடியும் என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது. அக்கட்சியின் துணைத் தலைவர் அகிலவிராஜ் காரியவசம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்று காரணமாக ஏற்பட்டுள்ள வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் மக்கள் பெரும் சுமைக்கு ஆளாகியுள்ளனர். இருப்பினும் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் நிவாரணம் கிடைக்கும் என எதிர்பார்த்திருந்த மக்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் எதிரணியைச் சேர்ந்த கட்சிகள் அனைத்துமே இந்த வரவு செலவுத் திட்டத்தை கடுமையாக விமர்சித்து வருகின்றன.

இந்நிலையில், எதிர்வரும் மூன்று வருடங்களில் மலையக தோட்டத் தொழிலாளர்களின் லயக் குடியிருப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என நிதியமைச்சர் வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பித்து உரையாற்றும் போது தெரிவித்தார். லயக்குடியிருப்புகளை மூன்று வருடங்களில் அகற்றி, தனி வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்காக 500 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இது ஒரு விதத்தில் மலையக மக்கள் மத்தியில் வரவேற்பை பெற்றிருந்தாலும். இந்த திட்டம் கூறியபடி நடைமுறைக்கு வருமா என்பதில் அவர்களுக்கு சந்தேகமே ஏற்பட்டுள்ளது.

காணாமல் போனோரின் குடும்பங்களுக்கு இழப்பீடு செலுத்துவதற்காக 300 மில்லியன் ரூபாயை ஒதுக்க முன்மொழியப்படுவதாகவும் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஸ தெரிவித்துள்ளார். இதுவும் எந்த அளவிற்கு சாத்தியம் என்பது தெரியவில்லை.

இதேவேளை, காணாமலாக்கப்பட்ட தங்கள் உறவுகள் தொடர்பில் தெளிவான பதிலை வழங்குமாறு காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அரசாங்கம் பொறுப்புக் கூறலில் இருந்து தப்பிக்கொள்வதற்காக இந்த இழப்பீட்டை வழங்கி பிரச்சினையை முடித்துக்கொள்ளப் பார்க்கின்றது என்பதால், இழப்பீடு அறிவிப்பு பாதிக்கப்பட்ட மக்களை திருப்திப்படுத்தவில்லை.

ஆசிரியர் சம்பள முரண்பாட்டை ஒரே நேரத்தில் தீர்ப்பதற்கு, 30 ஆயிரம் மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் தெரிவித்துள்ளமைக்கு போராட்டங்களில் ஈடுபட்ட அதிபர், ஆசிரியர் சங்கங்கள் மத்தியில் ஓரளவு வரவேற்பு கிடைத்துள்ளதாக தகவல்கள் வெளியாகின்றன.

ஒவ்வொரு ஆண்டும் வரவு செலவுத் திட்டம் அறிவிக்கப்படும் போது பொது மக்கள் தங்களின் வாழ்வாதாரம், வாழ்க்கைச் செலவு போன்றவற்றிற்கு நிவாரணம் கிடைக்குமா என்பதையே எதிர்ப்பார்க்கின்றனர். ஆனால், பொது மக்களுக்கான நிவாரணம் எதுவும் இந்த வரவு செலவுத் திட்டத்தில் வழங்கப்படவில்லை என்பதால் இந்த வரவு செலவுத் திட்டம் பொதுமக்களுக்கு பாரிய ஏமாற்றத்தையே ஏற்படுத்தியுள்ளது.



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416.754.7338 / 416.724.7480
3011 Markham Road, Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough



CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!

• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# இன்னல் நீக்கும் இயற்கை - 77



- அகணி -
authorakani@gmail.com


அன்பான விளம்பரம் வாசகர்களே!

டாக்டர் எஸ். ரேவதி அவர்களின் அக்குபிரசர் மருத்துவம் என்ற நூலினை வாசிக்கும் வாய்ப்பு கிட்டியது. இந்த நூலில் வாசித்தறிந்த சில விடயங்களையும் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அக்கியுபிரசர் புள்ளிகளை அக்கி புள்ளிகள் என்று இந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அக்கிபுள்ளிகளை அடையாளம் கண்டு கொள்ள இந்த நூல் மிகவும் உதவியாகவிருக்கும். டாக்டர் எஸ். ரேவதி இயற்கை மருத்துவத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். இந்த நூலில் டாக்டர் எஸ். ரேவதி அவர்கள் இந்தியாவில் அக்குபிரசர் சிகிச்சை ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியது என்பதை சுஸ்ருதர் சம்ஹிதையில் குறிப்புகள் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். இந்தியாவில் தோன்றிய அக்கியுபிரசர் மருத்துவம் இந்தியாவில் போற்றி பாதுகாக்கப்படாது இலங்கை, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டே சீனர்களால் உலகம் முழுவதும் பரப்பப்பட்டது என்றும் இந்த நூலில் கூறப்பட்டுள்ளது.

நமது உடலில் உள்ள உறுப்புக்களின் இணைவு நரம்புகள் கையிலும், காலிலும் இணைக்கப்பட்டுள்ளன. உடலில் நோய் ஏற்பட்டுள்ள உறுப்புக்களுக்குத் தொடர்புள்ள இந்தப் புள்ளிகளில் அழுத்தம் கொடுப்பதின் மூலம் நிவாரணம் பெறலாம் என்பதை டாக்டர் எஸ். ரேவதி அவர்கள் அழகாக எடுத்துரைத்துள்ளார். கை, கால் மற்றும் உடலில் உள்ள அக்கு புள்ளிகளில் கைவிரலினால் முக்கியமாக கட்டைவிரலினால் அல்லது பென்சில், பேனா ஆகியவற்றின் கூர்மை இல்லாத பகுதிகளால் அழுத்தம் கொடுக்கலாம் எனக் கூறப்பட்டுள்ளது. எந்த வயதினரும் அக்கியுபிரசர் சிகிச்சை மூலம் நிவாரணம் பெறலாம் என்றும் கூறப்பட்டுள்ளது. அக்கு புள்ளிகளில் கை, கால்களில் ஐந்து விநாடி அழுத்தம் கொடுத்துப் பின்பு ஐந்து விநாடிகள் அழுத்தத்தை தளர்த்த வேண்டும் என்றும் அனைத்துப் புள்ளிகளிலும் சேர்த்து மொத்தம் 10 நிமிடம் முதல் 15 நிமிடம்வரை அழுத்தம் கொடுத்தால் போதுமானது என்றும் ஒவ்வொரு அடையாள புள்ளிக்கும் 30 நொடிகள் முதல் ஒரு நிமிடம் வரை அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் மருத்துவர் எஸ்.ரேவதி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

நீண்ட நாள் வியாதிகளுக்கு தொடர்ந்து 15 நாட்கள் அக்குபிரசர் சிகிச்சை அளித்து பின்பு 5 நாட்கள் இடைவெளி விட்டு சிகிச்சையை மீண்டும் தொடர வேண்டும்.

இந்த நூலில் பதிவு செய்யப்பட்டுள்ள அக்கியுபிரசர் சிகிச்சையின் நன்மைகள் எவை எனக் கவனிப்போம். உடலை ஆரோக்கியப்படுத்தவும், ஏற்பட்டுள்ள நோயிலிருந்து விடுபடவும் உதவும்.




மாத்திரைகள் இன்றி எல்லோராலும் செய்யக்கூடிய சிகிச்சைமுறை. பக்க விளைவுகள் இல்லாத சிகிச்சை முறை. ஏனைய சிகிச்சை முறைகளுடன் சமாந்தரமாகச் செய்யக்கூடியது. எல்லோரும் தாமாகச் செய்யக்கூடியது. நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கச் செய்கிறது. மனநோய், பக்கவாதம், ஆஸ்துமா போன்ற நோய்களிலிருந்தும் நிவாரணம் பெற உதவுகிறது. குறைந்தளவு காலத்தில் நிவாரணம் கிடைக்கும்.

இரண்டு கைகளையும் ஐந்து நிமிடங்கள் நாள்தோறும் தட்டுவதனால் மனதில் மகிழ்ச்சி ஏற்படும். இந்தப் பயிற்சியால் இரத்த ஓட்டம் சீராகுவதோடு உடல் உறுப்புகளைத் தூண்டுதலும் செய்கிறது. இந்தப் பயிற்சியால் நினைவாற்றலும் அதிகரிக்குமென டாக்டர் எஸ்.ரேவதி குறிப்பிட்டுள்ளார்.

கட்டை விரலை அழுத்துவதால் தலைவலி சுகமாகும். சுட்டு விரலை அழுத்துவதால் இருதயம் சீராக இயங்க உதவும். சமிபாடு சீராகும். இருமல், தும்மல் போன்றவை குறையும். நடுவிரலை அழுத்துவதால் கண்பார்வை சீராக இருக்கும். மோதிர விரலை அழுத்தினால் காது, நரம்பு தொடர்பான நோய்கள் குணமாகும். சுண்டுவிரலை அழுத்துவதால் மூலம், உடல் சோர்வு போன்றவை நீங்கும்.

கையின் ஐந்து விரல்களும் பஞ்சபூதங்களுடன் தொடர்புடையவை. கட்டைவிரல் - நெருப்பு, சுட்டுவிரல் - காற்று, நடுவிரல்- ஆகாயம், மோதிரவிரல் - நிலம், சுண்டு விரல் - நீர்.

இந்த நூலில் டாக்டர் எஸ். ரேவதி அவர்கள் அக்குபிரசர் தத்துவங்களைப் பின்வருமாறு விளக்குகிறார். சீனர் உயிர் சக்தியை இன் (Yin), யாங் (Yaug) என இரு வகைப்படுத்துகின்றனர். இன் என்பது எதிர்மறை ஆற்றலும், யாங் என்பது நேர்மறை ஆற்றலும் கொண்டவை. இவை இரண்டும் உடலில் சமமாக இருக்க வேண்டும். இவை சமமாக இல்லாவிட்டால் உடலில் நோய் ஏற்படும். யாங் அடிப்படையில் வரும் நோய்களை குறுகிய கால நோய்கள் என்றும், இன் அடிப்படையில் வரும் நோய்களை நீண்ட கால நோய்கள் என்றும் கூறுவர்.

பஞ்ச பூதங்கள் மனித உடலில் உள்ள பன்னிரண்டு உறுப்புகளுடன் தொடர்புபடுத்தப்படுகின்றன. சீனர் உறுப்புகளின் உயிர்சக்தி ஓட்டத்தை உறுப்புகளின் கடிகார விதி (ஓர்கான் கிளாக் விதி Organ Clock Rule) மூலம் வகைப்படுத்தியுள்ளனர். ஒருநாளில் உள்ள இருபத்தி நான்கு மணி நேரத்தில் ஒவ்வொரு உறுப்புகளும் இரண்டு மணி நேரத்தில் உயிர் சக்தி அதிகரித்து வருகின்றது. இந்தக் குறிக்கப்பட்ட நேரத்தில் அக்குயுபிரசர் சிகிச்சை செய்வதன் மூலம் அந்தந்த உறுப்புக்களுடன் தொடர்புடைய நோய்களுக்கான அக்கியுபிரசர் சிகிச்சையைச் செய்து வருதல் நல்லது. நுரையீரல் காலை 3 மணி _ 5 மணி, பெருங்குடல் காலை 5மணி - 7மணி, இரைப்பை காலை 7மணி _ 9 மணி, மண்ணீரல் காலை 9 மணி _ 11 மணி, இருதயம் காலை 11 மணி _ 1 மணி, சிறுகுடல் பகல் 1 மணி _ 3 மணி, சிறுநீரகப்பை _ மாலை 3 மணி -5 மணி, சிறுநீரகம் மாலை 5 மணி _ 7 மணி, இருதய உறை _ மாலை 7 மணி _ 9 மணி, மூவெப்பக் குழி - இரவு 9 மணி _ பித்தப்பை இரவு 11 மணி _ 1 மணி, கல்லீரல் - பின்னிரவு 1 மணி _ 3 மணி.

**அன்பான விளம்பரம் வாசகர்களே!**

**இயற்கை வளங்களால் எவ்வாறு இன்னல் நீங்கி வாழலாம் என்று அறியும் பொருட்டு எழுந்த தேடலால் கிடைத்த தகவல் பதிவாக அசைந்து கொண்டிருக்கும் இந்தத் தொடர்கட்டுரை எமது பொது அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் எழுதப்படுகின்றது. இக்கட்டுரையில் கூறப்படும் கருத்துக்கள் இயற்கை சார்ந்து இருந்தாலும் உங்கள் உடல்நிலைக் கேற்ப பொருத்தமான மருத்துவக் கருத்துக்களாக அமைந்து விடாது என்பதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதும் பொருத்தமான வைத்திய ஆலோசனையை மேற்கொள்ளுங்கள் என்று வலியுறுத்திக் கூறிக்கொள்கின்றேன். ஆனாலும் நாம் இயற்கையோடு இணைந்து வாழ்வதற்கான தகவலையும், விழிப்புணர்வையும், ஆரோக்கியமாக வாழ்வதற்கு வேண்டிய பொதுவறிவையும் இந்தக் கட்டுரை வழங்கும் என்று நம்புகின்றேன்.**

இந்த நூலில் எல்லா அக்கி புள்ளிகள் பற்றிய விபரத்தையும் டாக்டர் எஸ். ரேவதி அவர்கள் வழங்கியுள்ளார். அக்கியுபிரசர் பற்றி அறிந்து பயன் பெறுவதற்கு அருமையான நூலாக உள்ளது. இந்த நூலினை படித்துப் பயன் பெறுங்கள்.

Acupressue Potent Poimys – A Guide to self care என்ற Michael Reed Gach அவர்களின் நூலையும் வாசிக்கும் வாய்ப்பும் கிடைத்தது. இந்த நூலிலும் அக்கு புள்ளிகள் பற்றிய விபரங்கள் படங்களுடன் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. இணையத் தளங்கள் வாயிலாகவும் அக்கிபுள்ளிகள் பற்றிய விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

அடுத்த இதழிலும் எனது தேடலில் கிடைக்கும் புதிய தகவல்களுடன் தொடர்ந்து உரையாடுவோம். உங்கள் எண்ணங்களையும் தெரியப்படுத்துங்கள். மீண்டும் சந்திப்போம் என்று கூறி விடைபெறுகின்றேன். (தொடரும்)

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, • முதுகு நோவு • வாகன விபத்து • மன அழுத்தம் • விளையாட்டுக் காயங்கள் • தலைவலி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS • TENNIS ELBOW PROBLEM
• SKIN PROBLEM • TREAT WITH MASSAGE THERAP
• RESPIRATORY PROBLEMS • ALLERGIES
• DIGESTIVE PROBLEMS • SEXUAL PROBLEMS
• VARICOSE VEINS • SEXUAL PROBLEMS
• BACK PROBLEM / NECK PROBLEM • CHOLESTEROL • TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

Cough, Flu, Depression, Anxiety, Asthma, Tonsillitis
Gout, Arthritis, P.M.S, Leucorrhea, Migraines, Hair Loss
Diabetes, Cystitis, Cancer, Prostatitis, Obesity, Hemorrhoids
Stomatitis, Colitis

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

## சூழல்...

02ஆம் பக்கத்தொடர்ச்சி




ஆராய்ச்சிக் குழுவின் அறிக்கையின்படி இதுவரை நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் காலநிலை மாநாடுகளில் சமர்ப்பிக்கப்பட்ட நாடுகளின் உறுதிமொழிகளின்படி அவர்கள் பசுமை வாயுக்களின் வெளியேற்றத்தை 2030ஆம் ஆண்டளவில் கட்டுப்படுத்தினால் அதன்மூலம் வரும் சுற்றுப்புறச் சூழல் வெப்பநிலை உயர்வு 2100ஆம் ஆண்டிற்குள் 2.4°Cஇற்கு உயர்ந்து விடும். இந்த 2.4°C சூழல் வெப்பநிலை உயர்வில் மனித இனம் வாழ முடியாது" என்றார்.

# பொறுமை



Dr. ஃபஜீலா ஆசாத்
சர்வதேச வாழ்வியல் ஆலோசகர்

இதற்கு மேல் ஒருபோதும் பொறுக்க முடியாது. நான் எவ்வளவுதான் பொறுத்து போவது. என்னை யார் என்று நினைத்துக் கொண்டாய் என்று ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் அனேகமாய் அனைவருமே பொறுமை இழந்து சொல்லி இருப்போம்.

இந்த அவசர உலகத்தில் தயார் செய்யப் பட்ட எல்லாமே உடனுக்குடன் கிடைக்க வேண்டும் என்றே மனம் விரும்புகிறது. 3g, 4g அடுத்து 5g என வந்து இன்று எல்லாமே மின்னல் வேகத்தில் கிடைத்து விடுகிறது. முன்பெல்லாம் நூலகங்களுக் குப் போய் புத்தகத்தைப் புரட்டிப் புரட்டிப் பார்த்து தெரிந்து கொண்ட விடயங்கள் எல்லாம் இன்று ஒரு touch screen இல் விரல் அசைவில் மளமளவென்று வந்து விழுந்து விடுகின்றன.



செய்திகள் வரும் வேகத்திலேயே செயல் களும் நடைபெற வேண்டும் என்று நினைக்கும்போதுதான் வினையாகிறது.

பொறுமை என்றாலே பிறர் தரும் வலியை, சங்கடங்களை, நியாயமற்ற செயல்களை பொறுத்துக் கொள்வதே என்றே பலரும் நினைத்துக் கொள்கின்றனர். ஆனால், பொறுமைக்கு அர்த்தம் பிரித்தால் அவசர கதியில் இயங்காதீர்கள். நிதானமாக செயல் படுங்கள், வேகம் வேண்டாம் என்பதை எத்தனை பேரால் உணர முடிகிறது.

பொறுமை என்பது பிறருடனான செயல் களில் மட்டுமல்லாமல் உங்கள் அன்றாட செயல்களிலும் அமல்படுத்து வதில்தான் உற்சாகமும் உண்மையான மகிழ்ச்சியும் இருக்கிறது.

வாழ்க்கையின் வெற்றிக்கு பொறுமை வேண்டும் என்பது எல்லோருக்கும் தெரிந்தாலும் எல்லோராலும் அப்படி பொறுமையாக இருக்க முடிவதில்லை. அதற்கு முக்கியமான காரணம், 'தங்கள் பொறுமையை பிறர் பலவீனம் என்று நினைத்து விடுவார்களோ' என அவர் களுக்குள் எழும் எண்ணம்தான் என்கிறது மனஇயல். உண்மையில் பொறுமை என்பது ஒரு பலம். அதனை உறுதியாக நம்புவோர் மட்டுமே அதை சரியாகப் பயன்படுத்துவர். அப்படி பக்குவப்பட்டோ ருக்கு எந்த ஒரு விடயத்திலும் பொறுத்துப் போவது அவர்களுடைய தாக்குப்பிடிக்கும் சக்தியைக் கூட்டும். எந்த சூழலிலும் விடாமுயற்சியோடு வெற்றி பெற உதவும்.

பொதுவாக, யாரும் பொறுமையற்றவர் கள் இல்லை. ஒரு குழந்தை பெறுவதற் குப் பத்து மாதங்கள் காத்திருக்க வேண்டும் எனத் தெரியும்போது யாரும் அதற்காக புலம்பிக் கொண்டிருப்பதில்லை. அதற்கான காலம் வரும்வரை நிச்சயமாக காத்திருக்கின்றனர். அத்தனை காலமும் என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக் கூடாது என்று ஒன்றுக்கு பத்து முறை யோசித்து மிகுந்த கவனத்துடனே ஒவ்வொரு செயலையும் செய்கின்றனர்.
உங்களுக்குத் தெரியும் ஒன்றைப்பற்றி தெளிவான பார்வை இருக்கும்போது அதன் நன்மை தீமைகள் புரியும்போது, அதன் கால வரையறையை சரியாகத் திட்டமிடும் போது மனம் அதற்காகத் தன்னை தயார் செய்து கொள்ளும். எந்த சூழலிலும் பொறுமையற்றுத் தவிக்காமல் பொறுமையோடு, விடா முயற்சியோடு வெற்றியைத் தட்டிச்செல்ல முனையும்.

சீன மூங்கில் பயிரிடுதல் பற்றி அறிவீர் களா? ஒரு விவசாயி சீன மூங்கில் விதை களை விதைத்து தண்ணீர் பாய்ச்சி வருகிறார். ஒரு வருடம் போகிறது, எந்த வளர்ச்சியும் இல்லை. இரண்டாவது வருடம் போகிறது, இப்போதும் பூமிக்கு மேல் எதுவும் மாற்றம் தெரியவில்லை. இப்படியே 3ஆவது 4ஆவது வருடங்களும் போகின்றன. அவரது நண்பர்கள் அவரை சந்தேகமாக பார்க்கத் தொடங்குகின்றனர். அவரது பொறுமை, முயற்சி, அக்கறை அனைத்துமே கேள்விக்கும் கேலிக்கும் ஆளாகிறது. 5ஆவது வருடம் தொடங்கு கிறது. நிலத்தின் மேற்பரப்பில் சின்னஞ் சிறிதாக எட்டிப் பார்க்கும் மூங்கில் செடி ஆறே வாரத்தில் அசுர வளர்ச்சி கொண்டு வானளாவ எழுந்து நிற்கிறது. அதுவும் எப்பேர்ப்பட்ட வளர்ச்சி. ஒவ்வொரு மரமும் 80 அடி உயரம் வளர்ந்து கேள்வி கேட்ட வர்களின் வாயை அடைக்கின்றன. ஆறு வாரத்தில் அசுர வளர்ச்சி அடைய வேண்டு மென்றால் 4 ஆண்டுகள் அந்த விதைகள்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்...)

கோவிட்-19 தடுப்பூசிகள் பற்றிய கேள்விகள் உள்ளதா?

211 ஃபோன் லைன் ஆங்கிலம், பிரஞ்சு மற்றும் 200க்கும் மேற்பட்ட பிற மொழிகளில் உங்களுக்குத் தேவையான தகவல் அல்லது உங்களுக்கு உதவக்கூடிய ஆதாரங்களைக் கண்டறிய உதவும்.

இந்த சேவை இலவசம் மற்றும் ரகசியமானது.

211 ஐ அழைக்கவும்.

211®

Votre gouvernement
Québec

# பண மதிப்பிழப்பு நாள் ஐந்தாம் ஆண்டு நிறைவு

# கறுப்பு தினமா? கறுப்பு பண ஒழிப்பு தினமா?

- கண்ணன் -

நவம்பர் 08, 2016, தன் மகளின் திருமணத்திற்காக அதுவரை ரூ.500, ரூ.1000ங்களாகக் குடிகார கணவனுக்குத் தெரியாமல் சேமித்து வைத்திருந்த தாய் மார்கள், தன் குழந்தையின் சிகிச்சைக் காக 500, 1000 ரூபாய் நோட்டுக்களை கடனாக வாங்கி வைத்திருந்த பெற்றோர் என இந்தியாவில் எவரும் அன்றிரவு அப்படி ஓர் அறிவிப்பை எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். திடீரென இரவு 8 மணியள வில் தொலைக்காட்சிகளில் தோன்றிய பிரதமர் மோடி, “இன்று இரவு முதல் 500, 1000 ரூபாய் நோட்டுகள் செல்லாது” என்ற அறிவிப்பை வெளியிட்டார். அடுத்த சில நிமிடங்களிலேயே ஏடிஎம் மையங்களில் மொய்க்க தொடங்கினர் மக்கள், 100 ரூபாய் தாளை எடுப்பதற்காக.

“நம் நாட்டில் ஒளிந்திருக்கும் கறுப்புபணம், கள்ள நோட்டுகள் மற்றும் தீவிரவாதம் ஆகியவற்றை களையெடுக்கவே இந்த நடவடிக்கை. மக்கள் தங்களிடம் உள்ள 500, 1000 ரூபாய் நோட்டுகளை டிசம்பர் 30ஆம் திகதிக்குள் வங்கிகளில் கொடுத்து மாற்றிக்கொள்ளலாம்” என்றும் அறிவிப்பில் கூறினார் மோடி. அறிவிப்பு வெளியான நாள் வெள்ளி. சனி, ஞாயிறு விடுமுறையைத் தொடர்ந்து திங்கட்கிழமை முதல் வங்கிகளுக்கு படையெடுக்க தொடங்கியது மக்கள் கூட்டம்.

ஒரேயொரு புதிய 2000 ரூபாய் தாளுக்காக காலை முதல் மாலைவரை வங்கிகளின் முன்னாலும், ஏடிஎம் மையங்களின் முன்னாலும் தவமிருந்தவர்களும், அதிகாலை முதலே வங்கிகளின் வாசலில் படுத்து இடம் பிடித்தவர்களும் ஏராளம். குழந்தைகளுடன் தாய்மார்கள் வந்து வங்கிகளின் முன்னால் உணவுகூட சாப்பிடாமல் வரிசையில் நிற்பது போன்ற ஏராளமான கொடுமைகள் அரங்கேறின. இதனால் 400க்கும் மேற்பட்டோரது உயிரும் பறிபோனது.

இந்தியாவில் பணமதிப்பிழப்பு நடவடிக்கை அறிவித்த உடனேயே உலகம் முழுவதும் இருந்து பொருளாதார வல்லுநர்கள் பலரும் தங்கள் கருத்துகளை பதிவு செய்யத் தொடங்கினர். இந்த நடவடிக்கையால் ஏற்படப்போகும் பொருளாதார வீழ்ச்சி குறித்தும் அப்போதே கணித்தனர். இதுகுறித்து அறிக்கை வெளியிட்ட ஹெச்.எஸ்.பி.சி., “பணமதிப்பிழப்பு நடவடிக்கையால் அடுத்த 12 மாதங்களில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 1 விழுக்காடு குறையும், இத்திட்டம் நீண்ட கால நோக்கில் பலன் அளிப்பது அரசின் அடுத்தடுத்த நடவடிக்கைகளை சார்ந்த ஒன்று” என தெரிவித்தது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், “கிட்டத்தட்ட 2 விழுக்காடு வரை ஜிடிபி பாதிப்பை சந்திக்கும்” எனக் கூறினார். பொருளாதாரத்திற்காக நோபல் பரிசு பெற்ற புகழ் பெற்ற பொருளாதார நிபுணர் அமிர்த்தியா சென், தனியார் தொலைக் காட்சி நேர்காணல் நிகழ்ச்சியொன்றில், “ஒன்றிய அரசின் பண மதிப்பிழப்பு நடவடிக்கை மாபெரும்



தவறான ஒன்று” எனக் கருத்துத் தெரிவித்திருந்தார். “பணமில்லாத பொருளாதாரம் மற்றும் ஊழலுக்கு எதிரானது என்ற இரு நிலைகளிலும் இந்த நடவடிக்கை பலனளிக்கப் போவதில்லை என்பதுடன், மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் இந்த நடவடிக்கைக்குப் பின்னால் சரியான காரணம் ஏதும் இருப்பதாக தோன்றவில்லை” என்றும் குறிப்பிட்டிருந்ததார்.

உலக வங்கியும் இந்திய பொருளாதார வளர்ச்சி 7.6%இல் இருந்து 7%ஆகக் குறையும் எனக் கணக்கிட்டது.

பணமதிப்பிழப்பு நடவடிக்கை மக்களுக்குப் பயன்தரும் விதமாக அமைந்ததோ இல்லையோ இணையம் மூலம் வர்த்தகம் மேற்கொள்ளும் நிறுவனங்கள் தங்களின் வியாபாரத்தை உயர்த்திக்கொள்ள பெரிதும் துணைநின்றது என்றே கூறலாம். பேடிஎம் போன்ற கார்பரேட் நிறுவனங்களுக்கு மோடியே விளம்பர தூதராக இருந்து அவர்களது வர்த்தகத்தை பெருக்கிக் கொடுத்தார். அச்சமயத்தில் இந்தியாவின் வர்த்தகத்தில் பெரும்பங்கினை இணைய வர்த்தகம் ஆக்கிரமித்திருந்தது. இதும் பெரும்பாலானோரிடம் கடும் விமர்சனத்திற்கு உள்ளானது.

இந்த நடவடிக்கையை அறிவிக்கும்போதே, “50 நாட்களில் நிலைமை சீரடைந்துவிடும்” என மோடி தெரிவித்திருந்தார். 2016 டிசம்பர் 30ஆம் திகதியோடு அவர் தெரிவித்த 50 நாள் நிறைவடைந்தது. எனினும் வங்கிகளின் முன்னும் ஏடிஎம் மையங்களின் முன்னும் மக்கள் கூட்டம் குறைந்ததாய் இல்லை. அந்த 50 நாட்களில் மட்டும் சுமார் 74 அறிவிக்கைகளை மாறிமாறி வெளியிட்டு மக்களை பதட்டத்துடனே வைத்திருந்தது இந்திய ரிசர்வ் வங்கி. மக்களும் காலப்போக்கில் அந்த சூழலுக்குப் பழக்கப்பட்டுவிட்டனர் என்றே சொல்லலாம். 50 நாட்கள் நிறைவடைந்ததும் நிலைமை சீராகாததால் எதிர்க்கட்சிகள் பலவும் ஒன்றிய அரசினை கேள்வியெழுப்பத் தொடங்கினர், வெள்ளை அறிக்கை தாக்கல் செய்யவும் கோரினர். முறையான ஏற்பாடுகள் ஏதுமில்லாமல் அவசர கோலத்தில் கொண்டுவரப்பட்ட இத்திட்டம் முற்றிலும் தோல்வியடைந்து விட்டது என விமர்சிக்கத் தொடங்கினர்.

திட்டம் அறிவிக்கப்பட்டது முதலே பலரும் பல்வேறு வகையான கருத்துகளைக் கூறி வந்தாலும் பெரும்பாலான மக்களின் மனதில், “முன்னறிவிப்பு ஏதுமின்றி இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டாலும் கறுப்புப்பண ஒழிப்பில் நிச்சயம் இது நன்மை பயக்கும்” என்ற எண்ணமே இருந்தது. ஆனால், அடுத்தடுத்த நிகழ்வுகள் மக்களின் மனதில் இருந்த நம்பகத்தன்மையை குறைக்கத் தொடங்கின. உதாரணம், தமிழ்நாட்டில் சேகர் ரெட்டியின் வீட்டில் நடந்த வருமான வரிச் சோதனை. ஒரு சாமானியன் ஒருநாள் முழுவதும் வரிசையில் நின்று வெறும் 2000 ரூபாய் மட்டுமே மாற்றமுடிந்த நிலையில், சேகர் ரெட்டியின் வீட்டில் இருந்து சுமார் 34 கோடி ரூபாய் அளவிற்கு புதிய ரூபாய் நோட்டுகள் கைப்பற்றப்பட்டது போன்ற நிகழ்வுகள் மக்களிடம் அரசாங்கம் மீதான நம்பிக்கையை வெகுவாகக் குறைத்தன.

பணமதிப்பிழப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சரியாக 6 மாதங்களுக்குப் பின் 2017-2018ஆம் ஆண்டின் முதல் காலாண்டுக்கான பொருளாதார வளர்ச்சி குறித்த அறிவிப்பானது வெளிவந்தது. அதில் பணமதிப்பிழப்பு நடவடிக்கையானது, இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி எனப்படும் ஜிடிபியில் கணிக்கப்பட்டதைவிடப் பெரும் சரிவை ஏற்படுத்தியிருப்பது தெரியவந்தது.

2015-2016ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டான ஜனவரி-மார்ச்சில் 7.6%ஆக ஜிடிபி இருந்தது. 2017-2018 நிதியாண்டின் முதல் காலாண்டான ஜனவரி-மார்ச்சில் ஜிடிபி 7.1%ஆக இருக்கும் என ஒன்றிய புள்ளியியல் துறை கணித்திருந்தது. ஆனால், கணிக்கப்பட்டதை விட 1% அளவு ஜிடிபி சரிவை சந்தித்திருந்தது. திடீரென மேற்கொள்ளப்பட்ட பண மதிப்பிழப்பு நடவடிக்கையாலேயே இது நிகழ்ந்திருந்தது. நாட்டின் உள்நாட்டு மொத்த உற்பத்தியில் ஏற்பட்ட இந்த மோசமான வீழ்ச்சி காரணமாக உலகின் வேகமாக வளர்ந்துவரும் பெரிய பொருளாதாரம் கொண்ட நாடு என்ற சிறப்பை இந்தியா இழந்தது. இது பொருளாதார வல்லுநர்களிடம் கடும் விமர்சனத்தைப் பெற்றது.

பல எதிர்மறை விமர்சனங்களுக்கு மத்தியில் அவை அனைத்தையும் மூடி மறைக்கும் விதமாக பாஜக ஆட்சிக்கு வந்ததன் மூன்றாம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் அசாம் மாநிலத்தின் கவுஹாத்தியில் நடந்த பொதுக் கூட்டத்தில், “கடுமையான பணமதிப்பிழப்பு நடவடிக்கையை வெற்றியடையச் செய்த மக்களுக்கு நன்றி தெரிவித்ததுடன், 2022இல் விவசாயிகள் வருமானத்தை இரட்டிப்பாக்க ஒன்றிய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது” என அடுத்த தேர்தலுக்கான பிரச்சார விதைகளையும் தூவிசென்றார் மோடி.

தொடர்ச்சி 18ஆம் பக்கம்...)



Mahindan Mailvaganam, B.Sc., M.Sc.
Senior Insurance Specialist
Elite Field Sales Advisor
RBC Insurance
WOODSIDE SQUARE MALL (McCowan & Finch)
1571 Sandhurst Circle
Scarborough, ON M1V 1V2
mahindan.mailvaganam@rbc.com
Cell: 416-262-4973
• Universal Life Insurance • Term (10 to 40 years) Insurance
• Term 100 • Non Medical Insurance
• Critical Illness Insurance • Disability Insurance
• Travel Insurance • RRSP • TFSA
உங்கள் வாகனத்தின் மாதாந்த காப்புறுதி கட்டணம் அதிகரிக்கப்பட்டிருந்தால் எமது காப்புறுதி ஆலோசகர்களால் உங்களுக்கு உதவ முடியும்!
RBC Insurance
Life | Health | Auto | Home | Travel | Wealth

COMING SOON...

# LAWRENCE HILL TOWNS - A NEW TOWNHOME DEVELOPMENT

VICTORIA PARK AVE. & LAWRENCE AVE. EAST
TORONTO



FOR REGISTRATION
PLEASE CALL

HomeLife / GTA Realty Inc. Brokerage*

416.321.6969

HOMELIFE HIGHER STANDARDS

5215 Finch Ave. E., #203, Toronto ON. M1S 0C2

*Independently Owned & Operated

# ஜெய் பீம் - திரை விமர்சனம்



ஆரணி ஞானநாயகன்

1993இல் கடலூரில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டது ஜெய் பீம் என்ற படத்தின் கதை. இதில் சூரியா அச்சம்பவத்தின் முக்கிய நபரான சட்டத்தரணியான சந்துருவாக நடித்துள்ளார். இப்படத்தை இவரே தயாரித்துள்ளார்.

படமும் பெரிதளவு உண்மையில் நிகழ்ந்த சம்பவத்தைக் காட்டுகிறது. தமிழ்நாட்டின் முதற்குடி மக்களில் ஒருவரான இராசக் கண்ணு என்பவர் ஒரு வீட்டிற்கு வேலை செய்யச் சென்றார்.

அவர் வந்து சென்ற பிறகு அவ்வீட்டில் ஒருநாள் நகைகள் திருடப்பட்டன. இதனால் இராசக்கண்ணுவும் அவரது குடும்பத்தினரில் சிலரும் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டனர்.

